19091

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

## வரலாறு - I

சுட்டெண் : .............................

தரம் :- 11

நேரம் : 1 மணித்தியாலம்

**கவனிக்க :**

- **எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை உரிய வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

01. இலங்கையின் இராசரட்டைக்கால வரலாற்றை அறிய உதவும் நூல் எது.
1) மயூரசந்தேசய 2) போதிவம்சம் 3) பெரகும்பாசிரித்த 4) ராஜவலிய

02. முதலாம் விஜயபாகு மன்னனின் பனாகடுவ செப்புச் சாசனத்தில் "துருபுரம்" என அழைக்கப்பட்ட இடம்.
1) பொலனறுவை 2) மாகம 3) சிகிரியா 4) அனுராதபுரம்

03. பின்வருவனவர்களுள் இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று இலங்கை பற்றி எழுதிய எழுத்தாளர் யார்.
1) பாரனவோ டீ. குவேரோஸ் 2) பிலிப்ஸ் பல்டியஸ்
3) அரிஸ்டோட்டில் 4) மெகஸ்தனிஸ்

04. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதன் வேட்டையாடுவதில் இருந்து விவசாயத்தில் ஈடுபடுவதற்கு அடிப்படையாக அமைந்த பிரதான சுற்றாடற் காரணி
1) காலநிலையில் ஏற்பட்ட மாற்றம்
2) சனத்தொகை அதிகரிப்பு
3) வேட்டையாடுதலுக்கான விலங்குகள் குறைவடைந்தமை
4) மண்ணின் வளமான தன்மை அதிகரித்தமை

05. ஆரம்ப வரலாற்றுக்கால இலங்கையில் தொழில் ரீதியாக ஒன்றுபட்டு வாழ்ந்த குடியிருப்புக்கள் என்ற வகையில் இடையர் வாழ்ந்த கிராமமும் தச்சர் வாழ்ந்த கிராமமும் அழைக்கப்பட்ட பெயர்கள் முறையே.
1) கோபால காம, கேவட்ட காம 2) வட்டகீகாம, கும்பகாரகாம
3) கோபால காம, வட்டகீகாம 4) வட்டகீகாம, கோபால காம

06. பச்சைக் களிமண்ணால் செய்யப்பட்ட ஓடம் போன்ற அமைப்பினுள் மட்பாண்டங்களில் அஸ்தி வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட மாயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.
1) இப்பன் கட்டுவ 2) பெரகல 3) யட்டிகல் பொத்த 4) கல்சொஹன்



kalvi.lk

07. அலகபயமகாராஜா, நரேஸ்வர என்னும் எண்ணக்கருக்கள் மூலம் தம்மை அறிமுகப்படுத்திய இரு மன்னர்கள் முறையே.
1) நிஸங்க மல்ல, முதலாம் காசியப்ப 2) முதலாம் காசியப்ப, நிஸங்கமல்ல
3) முதலாம் காசியப்ப, குட்டகண்ண அபய 4) குட்டகண்ண அபய, முதலாம் காசியப்ப

08. கர்ப்பிணித்தாய்மாரின் தேவைக்காக பிரசவ விடுதிகளை கட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னன்.
1) முதலாம் உபதிஸ்ஸ 2) நான்காம் காசியப்ப
3) ஐந்தாம் மகிந்த 4) பண்டுகாபயன்

09. புராதன இலங்கையில் சேனைச் செய்கையில் இருந்து நெற்பயிர்ச் செய்கை முறை ஆரம்பமாவதற்கு பிரதான காரணமாகக் கூறக்கூடியது.
1) வனவிலங்குகளின் தொல்லைகள் அதிகரித்தமை.
2) காட்டுத்தீ பரவியமை.
3) சனத்தொகை அதிகரித்தமை.
4) அரசர்களின் உதவிகள் கிடைத்தமை.

10. கி.மு 250 ஆம் ஆண்டை அண்மித்த காலகல்வெட்டுக்களில் இல்லத்தலைவர்கள் கஹபதி என்ற சொல்லினால் குறிப்பிடப்பட்டிருந்தனர். இது பற்றி அறிய உதவும் கல்வெட்டு
1) தோணிக்கல கல்வெட்டு 2) பெரியபுளியம் குளம் கல்வெட்டு
3) கொத்தலகந்த கல்வெட்டு 4) பெரிமியன்குளம் கல்வெட்டு

❖ **பின்வரும் நீர்ப்பாசன அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 11ஆம் 12 ஆம் வினாக்களிற்கு விடை அளிக்குக.**

A – கலாவாவி B – கவுடுலுவாவி C – எலஹரக்கால்வாய்
D – நொச்சிப் பொத்தான E – ஜயகங்கை F – தலவத்து கால்வாய்

11. தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்ட நீர்ப்பாசன அமைப்புக்களைக் குறிக்கும் விடைகள்.
1) Bயும் Fஉம் 2) Aயும் Cயும் 3) Aயும் Eயும் 4) Cயும் Dயும்

12. வசப மன்னனால் அமைக்கப்பட்ட நீர்ப்பாசன அமைப்புக்களைக் குறிக்கும் விடைகள்.
1) Bயும் Cஉம் 2) Cயும் Dயும் 3) Cயும் Fயும் 4) Dயும் Eயும்

13. இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பழைய நாணயமான ஹஸ்ஸபு எந்த நாட்டில் செய்யப்பட்டது.
1) சீனா 2) அரேபியா 3) உரோம் 4) இந்தியா

14. பண்டைய நில அளவீட்டு முறைகளில் 1 அமுண (அவனம்) என்பது எவ்வளவு கரீசைக்கு சமனாகும்.
1) $\frac{1}{4}$ 2) $\frac{1}{2}$ 3) $\frac{3}{4}$ 4) 1

15. குளத்தில் இருந்து நீரைத் திறந்து விடும் போது ஏற்படும் அமுக்கத்தினைக் குறைத்து குளத்து நீரை வெளியேற்ற உதவும் தொழில்நுட்பக் கூறு எது.
1) குளக்கட்டு 2) சுருங்கை 3) கலிங்கல் 4) கலிங்கல் தொட்டி

16. பண்டைய இலங்கையில் குற்றவாளிகளை பிடிக்கும் வரை திருடன் மறைந்திருக்கும் கிராம மக்கள் ஒரு வரியினை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டி இருந்தது. அது எவ்வாறு அழைக்கப்பட்டது.
1) ஊர்த்தண்டப்பணம் 2) உள்ளூர் தண்டப்பணம்
3) கிராமத்து தண்டப்பணம் 4) திருட்டுத் தண்டப்பணம்


பக்கம் 3 ஐப் பார்க்க

kalvi.lk

17. ஸ்ரீ ஜயவர்த்தனபுரவில் பலம் வாய்ந்த கோட்டையை அமைத்து அதில் படையினரைக் குவித்து ஆரியச்சக்கரவர்த்திகளின் நடவடிக்கைகளுக்கு தடை விதித்தவர்.
1) சேனாதிலங்காதீர
2) வீரஅழகேஸ்வர
3) நிஸங்க அழகக்கோனார்
4) ஆறாம் பராக்கிரமபாகு

❖ **A தொடக்கம் F வரையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 18ஆம் 19 ஆம் வினாக்களிற்கு விடை அளிக்குக.**

A – நிக்கலஸ் கொபர்னிகஸ் B – ஐசக் நியூட்டன் C – கலிலியோ கலிலி
D – போலந்து E – இத்தாலி F – இங்கிலாந்து

18. தொலை நோக்கியைக் கண்டுபிடித்தவரையும் அவரது தாய் நாட்டையும் குறிக்கும் விடை.
1) Bயும் Dயும் 2) Cயும் Eயும் 3) Aயும் Fஉம் 4) Cயும் Fஉம்

19. புவி ஈர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்தவரின் பெயரும் அவரது தாய் நாட்டையும் குறிக்கும் விடை.
1) Bயும் Fஉம் 2) Bயும் Eயும் 3) Aயும் Dயும் 4) Aயும் Eயும்

20. கி.பி 1594 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயருக்கும் கண்டி இராச்சியப் படைக்கும் இடையே நடைபெற்ற தந்துறைப்போருக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேய கப்பித்தான் ஜெனரல்.
1) கொன்ஸ்தாந்தினு த.சா
2) ஜெரோ. லோபேஸ் த. சூசா
3) ஜெரோனி மோ.த.அசவேது
4) தியோகோ த.மெல்லோ கஸ்ரோ

21. இலங்கையில் முதன்முதலாக தபால் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு எது.
1) கி.பி 1858 2) கி.பி 1857 3) கி.பி 1856 4) கி.பி 1859

22. பல்வேறு கண்டு பிடிப்புக்களைச் செய்த சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A – ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ் B – ஜோர்ச் ஸ்டிவன்சன் C – சாமுவெல் மோஸ்
D – டெம்லர் E – அலெக்சாண்டர் கிரஹம்பெல்
மேலே குறிப்பிடப்பட்டவர்களுள் கைத்தொழிற் புரட்சியின் போது போக்குவரத்துடன் தொடர்புடைய கண்டு பிடிப்புக்களைச் செய்தோரைக் காட்டும் விடை.
1) Aயும் Cயும் 2) Cயும் Eயும் 3) Dயும் Eயும் 4) Bயும் Dயும்

23. கண்டி இராச்சியத்தினை கைப்பற்றிக்கொள்வதற்காக தந்திரத்திறமைமிக்க ஜோன் டொயிலியை முதலில் பயன்படுத்திக் கொண்ட பிரித்தானிய ஆளுநர்.
1) பிரட்ரிக்நோத்
2) றொபட் பிரௌன்றிக்
3) தோமஸ் மெயிட்லண்ட்
4) டொரிங்டன்

❖ **பின்வரும் அட்டவணையில் A – F வரையிலான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 24ஆம், 25ஆம் வினாக்களிற்கு விடை தருக.**

| போராட்ட தலைவன் | ஆளுநர் | போராட்டத்துக்குரிய காரணி |
|---|---|---|
| A கெப்பட்டிபொல திசாவை | C டொரிங்டன் | E பிரதானிகள் பாதிப்புற்றமை |
| B கொங்காலேகொட பண்டா | D றொபர்ட் பிரவுன்றிக் | F அரசின் வரிக்கொள்கை |

24. கி.பி 1848 ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய தகவல்களைக் காட்டும் விடை.
1) B, C, F 2) B, C E 3) A, C, F 4) A, D, E

25. கி.பி 1818 ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய தகவல்களைக் காட்டும் விடை.
1) A, D, F 2) A, D, E 3) B, D, E 4) B, C, F


பக்கம் 4 ஐப் பார்க்க
kalvi.lk

26. இலங்கையில் வடக்குப் பிரதேசத்தில் மிக ஒழுங்கமைந்த மிஷனரிக்கல்வி முறை பின்வரும் எந்த மிஷனரி சங்கத்தினால் வழங்கப்பட்டது.

1) சேர்ச் மிஷனரி சங்கம் 2) அமெரிக்கன் மிஷனரி சங்கம்
3) வெஸ்லியன் மிஷனரி சங்கம் 4) லண்டன் மிஷனரி சங்கம்

27. 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சியுடன் தொடர்பான கருத்துச்சோடிகளில் **பொருத்தமற்ற** சோடி எது.

1) இரத்மலானை தர்மலோக தேரர் மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனாவைத் தோற்றுவித்தார்.
2) ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார்.
3) அறிஞர் எம்.சி.எம் சித்திலெப்பை "முஸ்லீம் நேசன்" எனும் பெயரில் பத்திகை ஒன்றை வெளியிட்டார்.
4) அநாகாரிக தர்மபால மகாபோதி சங்கத்தை ஆரம்பித்தார்.

28. இலங்கையில் S.A. விக்கிரமசிங்க அவர்களால் கி.பி 1943 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசியற்கட்சி எது.

1) இலங்கை சம சமாஜக்கட்சி 2) இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி
3) ஐக்கிய தேசியக்கட்சி 4) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

❖ **கீழே A, B என்பவற்றில் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 29ஆம் 30ஆம் ஆகிய வினாக்களுக்கு விடை அளிக்குக.**

A – ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தமை.
B – ஜேர்மனி பெல்ஜியத்துக்குள் புகுந்து பெல்ஜியம் வழியாக பிரான்சை தாக்க ஆரம்பித்தமை.

29. இரண்டாம் உலக மகாயுத்தம் தொடர்பாக

1) Aயும் Bயும் சரியானவை 2) Aயும் Bயும் பிழையானவை
3) A சரியானது B பிழையானது 4) A பிழையானது B சரியானது

30. முதலாம் உலக மகாயுத்தம் தொடர்பாக

1) Aயும் Bயும் சரியானவை 2) Aயும் Bயும் பிழையானவை
3) A சரியானது B பிழையானது 4) A பிழையானது B சரியானது

31. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் புகையிரதப் பாதைகளை அமைக்கும் முயற்சியில் அதிகம் அக்கறை காட்டிய பிரித்தானிய ஆளுநர்.

1) எட்வட் பாண்ஸ் 2) றொபட் பிரௌன்றிக்
3) ஆதர் கோடன் 4) ஹென்றி வாட்

32. பின்வரும் நாடுகளில் அமெரிக்காவில் குடியேற்றங்களை **அமைக்காத** ஐரோப்பிய நாடு எது.

1) ஸ்பானியா 2) பிரான்ஸ் 3) போர்த்துக்கல் 4) ஜேர்மனி



Education கல்வி

kalvi.lk

❖ பின்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடி கூற்றுக்கள் / சோடிச்சொற்களை அவதானித்து வினா இல 33 தொடக்கம் 34 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.

A 1. கி.பி 1763 ஆம் ஆண்டின் பின்னரான புதிய வரி விதிப்பு
2. அமெரிக்க சுதந்திரப் போர்

B 1. முசோலினி
2. பாசிசவாதம்

C 1. பௌத்த மதம் பரவியமை
2. பிக்குனி சங்கமித்தை வருகை

D 1. கிராம சபைகள் செயலற்றுப் போனமை
2. டொனமூர் அரசியல் யாப்பு

33. முதலாவதன் தீவிர செயற்பாடு இரண்டாவதன் அதிகரிப்புக்கு காரணமானதை எடுத்துக்காட்டும் சோடிச்சொற்கள் / சோடிக்கூற்றுக்களைக் கொண்ட தெரிவு எது?
1) A 2) B 3) C 4) D

34. முதலாவதிற்கும் இரண்டாவதிற்குமிடையே எந்தவித தொடர்பையும் காட்டாத சோடிச்சொற்கள்/ சோடிக்கூற்றுக்களைக் கொண்ட தெரிவு எது?
1) A 2) B 3) C 4) D

35. இரண்டாவது ஆரம்பிப்பதற்கு முதலாவதன் அறிமுகம் காரணமானதைக் காட்டும் சோடிச்சொற்கள் / சோடிக்கூற்றுக்களைக் கொண்ட தெரிவு.
1) A 2) B 3) C 4) D

36. இலங்கையில் ஆளுநர் நாயகம் பதவிக்கு பதிலாக பெயரளவு சனாதிபதி பதவி அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் யாப்பு எது.
1) கி.பி 1972 முதலாம் குடியரசு யாப்பு
2) சோல்பரி அரசியல் யாப்பு
3) கி.பி 1978 இரண்டாம் குடியரசு யாப்பு
4) டொனமூர் அரசியல் யாப்பு

37. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளை அவை நடைபெற்ற காலப்பகுதியின் அடிப்படையில் ஒழுங்கு படுத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.
A – S.J.V. செல்வநாயகம் அவர்களால் சமஷ்டி கட்சி ஆரம்பிக்கப்பட்டமை.
B – நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறை அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டமை.
C – பிரித்தானியர் திருகோணமலைத் துறைமுகத்தை கைப்பற்றியமை.
D – இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியில் தரிசு நிலச்சட்டம் கொண்டுவரப்பட்டமை.
1) C D A B 2) C D B A 3) C B A D 4) C B D A

38. ஐக்கிய நாடுகள் சபையில் அனைத்து நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு எது?
1) பாதுகாப்புச்சபை
2) செயலகம்
3) சமூக பொருளாதார சபை
4) பொதுச்சபை

39. இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெறும் போது அமெரிக்காவில் சனாதிபதியாகப் பதவி வகித்தவர்.
1) வின்ஸ்சன்ட் சேர்ச்சில்
2) வூட்ரோ வில்சன்
3) பிரேங்ளின் ரூஸ்வெல்ட்
4) லொயிட் ஜோர்ச்

40. அணிசேரா நாடுகளின் அமைப்பு நிறுவப்படுவதற்கு காரணகர்த்தாக்களுள் ஒருவராகச் செயற்பட்ட எகிப்திய முன்னாள் சனாதிபதி
1) மார்ஷல் டிட்டோ
2) ஜவர்ஹர்லால் நேரு
3) அப்துல் கமல் நஸார்
4) மொகமட் அலி ஜின்னா

(1x40=40 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

19103

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

வரலாறு - II

சுட்டெண் : ............................ | தரம் :- 11 | நேரம் : 3 மணித்தியாலம்

மேலதிக வாசிப்பு நேரம் :- 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

கவனிக்குக.

- பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது, பகுதி II இல் இருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும், பகுதி III இல் இருந்து ஒரு வினாவுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

## பகுதி I

01. அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) இல் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப்படப் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

i) கலாஓயா, களுகங்கை, வல்லிபுரம், இரணைமடு, குருநாகல், சிலாபம், மகியங்கனை, பெட்ரிக்கோட்டை, பெந்தோட்ட, அகநகரம், மகாவாலுகாம, மட்டக்களப்பு.

ii) ரோம், சென்னை, ஜாவாதீவு, மத்தியதரைக்கடல், பாரசீகவளைகுடா, கம்போடியா

ஆ)

1. கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. முதலாம் விஜயபாகு மன்னனுக்கு உருகுணையில் அடைக்கலம் வழங்கிய பாதுகாப்பு அதிகாரி.

B. நாடுகாண் பயணத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிய போத்துக்கல் மன்னன்.

C. அடொல்ப் ஹிட்லர் சிறை வாழ்க்கையின் போது அவர் எழுதிய புகழ்பெற்ற நூலின் பெயர்.

D. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னன்.


A, B இனால் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் எழுதுக.

iii) 1. படம் A யில் காட்டப்பட்டிருக்கும் மாளிகையின் பெயர் என்ன.

2. இம் மாளிகை எந்த நாட்டில் அமைந்துள்ளது.

3. இம் மாளிகையில் இருந்து கடிதம் ஒன்றை எழுதிய ஒல்லாந்து நாட்டு மன்னனின் பெயர் என்ன.

4. மேற்கூறப்பட்ட மன்னன் எழுதிய கடிதம் யாருக்கு அனுப்பப்பட்டது. (4 புள்ளிகள்)



(A)



kalvi.lk

iv) 1. படம் B யில் காட்டப்பட்டிருப்பவரின் பெயர் என்ன
2. இவர் எந்த நாட்டை பிறப்பிடமாகக் கொண்டவர்.
3. இவரது வழிகாட்டலில் கி.பி 1880 ஆம் ஆண்டு கொழும்பில் உருவாக்கப்பட்ட சங்கத்தின் பெயர் யாது?
4. பௌத்த மக்களை அறிவூட்டுவதற்காக இவரால் வெளியிடப்பட்ட பத்திரிகையின் பெயர் என்ன.

(4 புள்ளிகள்)



(B)

02. i) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதர்கள் வாழ்ந்த
A. மலையகப் பிரதேச வெட்டவெளி வேட்டை நிலம் **ஒன்றினைக்** குறிப்பிடுக. (1 புள்ளி)
B. தாழ்நில உலர் வலய குகை வசிப்பிடங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) A) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்களின் சடங்கு சம்பிரதாய முறைகள் நடைபெற்றதற்கான சான்றுகள் கிடைத்த குகைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
B) இலங்கையில் முன்வரலாற்றுக் காலத்திற்குரிய மயானங்கள் காணப்படும் இடங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii) ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களின் இயல்புகளின் அடிப்படையில்
A. குளத்தினை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி அடைந்த குளக்கிராமங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
B. கிராமங்களை நிர்வகித்த "கமிக" என்ற கிராமத்தலைவனின் பணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iv) வரலாற்றுக் காலத்தில் நடைமுறையில் இருந்த பொருளாதார அமைப்பில் கைத்தொழில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை **மூன்று** காரணிகள் ஊடாக விளக்குக. (6 புள்ளிகள்)

03. i) வரலாற்றுக்கால இலங்கையில் அரச கட்டமைப்பில் அரனுக்கு அடுத்தபடியாக சம அதிகாரம் பெற்றிருந்த **மூவரைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii) பின்வரும் A, B, C மற்றும் D எழுத்துக்களின் மூலம் தரப்பட்டுள்ள வரிகள் மற்றும் சட்டங்கள் யாவை என்பதனை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.
A. வாய்க்கால்களில் மீன்பிடிப்பதற்காக அரசனுக்கு செலுத்திய மீன் வரிக்கு வழங்கப்பட்ட பெயர்.
B. அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர்செய்வதற்காக செலுத்திய நிலவரிக்கு வழங்கப்பட்ட பெயர்.
C. எருமை, பசு, ஆடு என்பவற்றைக் கொல்லுவோருக்கு மரணதண்டனை விதிக்கும் சட்டம் பொறிக்கப்பட்ட கல்வெட்டு.
D. அரச அதிகாரிகளால் அளவு குறிக்கப்படாத தராசுகள் கொண்டு வியாபாரம் செய்தல் கூடாது என்பதனைக் கூறும் கல்வெட்டு.
(தக்கபதி, கொடவாய தூண்கல்வெட்டு, போஜக்கபதி, மதர மஞ்சக்க, மிகிந்தலைக் கல்வெட்டு, பதுளைத் தூண் கல்வெட்டு) (4 புள்ளிகள்)

iii) சுற்றாடலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தினை உணர்ந்த முன்னைய ஆட்சியாளர்கள் வகுத்த சட்டங்களை **இரண்டு** காரணிகள் ஊடாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv) புராதனகால இலங்கையில் கட்டிடங்களை அமைக்கும் போது வளர்ச்சி அடைந்த விஞ்ஞான அறிவும் அந்த அறிவைச் செயற்படுத்துவதற்கான தொழில்நுட்பப் பயிற்சியும் பயன்படுத்தப்பட்டது.
ருவன்வெலிசாய தூபி அமைக்கப்பட்ட போது பின்பற்றப்பட்ட மேற்கூறிய விடயங்களை **மூன்று** காரணிகளின் ஊடாக சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)



பக்கம் 3 ஐப் பார்க்க

kalvi.lk

04. i) இலங்கையில் இரண்டாவது நகரமயமாக்கல் தோற்றம் பெறுவதற்கு அடிப்படையாக அமைந்த **மூன்று** காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii) A) வரலாற்றின் அடிப்படையில் இராஜரட்டைக்குரிய முதலாவது நகரமயமாக்கல் ஆட்சி நிலையங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

B) இலங்கையில் இராஜரட்டை நாகரீகம் வீழ்ச்சியடைந்த பின்னர் இரண்டாவது நகரமயமாக்கல் ஆட்சி நிலையங்கள் உருவாகும் வரையில் புத்தசாசனத்தையும் நாட்டையும் பாதுகாத்த பிரதேசத்தலைவர்கள் **இருவரைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii) A) வன்னியர்கள் எனப்படுபவர்கள் யார்? (2 புள்ளிகள்)

B) மூன்றாம் விஜயபாகு மன்னன் ஆரம்பத்தில் வன்னித்தலைவராகச் செயற்பட்டதாகக் கூறும் நூல் எது? (1 புள்ளி)

C) வன்னியர்களை மத்திய அரசுக்கு கீழ்படிய வைத்த **இரு** மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iv) பின்வரும் இரண்டாம் நகரமயமாக்கல் ஆட்சி நிலையங்களில் (இராசதானிகளில்) இலக்கியங்கின் வளர்ச்சியினை உதாரணங்களுடன் விளக்குக.

A) தம்பதெனியா B) கம்பளை (6 புள்ளிகள்)

05. i) கண்டி இராச்சியத்தில் பிராந்திய நிர்வாக அமைப்பில் திசாவைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

ii) கண்டி இராச்சியம் தொடர்பான பின்வரும் வினாக்களிற்கு உரிய சரியான விடைகளை A, B, C, D ஒழுங்கில் எழுதுக.

A. அரச மாளிகையின் தேவைக்காக பயன்பட்ட நிலம் அழைக்கப்பட்ட பெயர்.

B. புனித தந்ததாவுக்கு பொறுப்பான அதிகாரியின் உத்தியோக பூர்வமான பெயர்.

C. பிரதானிகளின் கட்டளைகள் மற்றும் செய்திகளை பிராந்திய அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்.

D. சமூக அமைப்பில் பிரதான சமூக அலகாக விளங்கியது யாது.

iii) இரண்டாம் இராஜசிங்கனின் அரசியல் நடவடிக்கைகளின் சிறப்பு அம்சங்களை **இரண்டு** செயற்பாடுகளின் அடிப்படையில் விளக்குக.

iv) போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆகியோர் கண்டி இராச்சியத்தினை கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட படை எடுப்புக்கள் தோல்வி அடைந்தமையில் செல்வாக்குச் செலுத்திய **மூன்று** காரணிகளை விளக்குக. (6 புள்ளிகள்)

06. i) பின்வரும் வினாக்களுக்குரிய விடை A, B, C ஒழுங்கில் எழுதுக.

A. இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர்.

B. கி.பி 1908 ஆம் ஆண்டில் இலங்கைக்கு அரசியல் யாப்புச் சீர்திருத்தம் ஒன்றின் தேவை தொடர்பான கோரிக்கையை குடியேற்ற நாட்டு செயலாளரிடம் கையளித்தவர்.

C. நகர்ப்புற தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக பாடுபட்டதோடு கி.பி 1922 ஆம் ஆண்டில் இலங்கை தொழிலாளர் சங்கத்தை அமைத்த தலைவர்.

ii) கோல்புறூக், சீர்திருத்தத்தின் முக்கியமான அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

iii) டொனமூர் அரசியல் யாப்பின் பிரதான அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

iv) பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.



kalvi.lk

07. i) இலங்கையில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பின்வரும் நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்ட போது அவற்றிற்கு நிதி உதவி வழங்கிய நாடுகளை A, B, C ஒழுங்கில் குறிப்பிடுக.

A. விக்டோரியா நீர்த்தேக்கம்

B. கொத்மலை நீர்த்தேக்கம்

C. ரந்தெனிவல நீர்தேக்கம்

ii) புதிய குடியேற்றங்களை உருவாக்கும் போது அரசாங்கம் எதிர் நோக்கிய சவால்கள் **நான்கு** தருக.

iii) சுதந்திரத்தின் பின்னர் இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களில் மகாவலி அபிவிருத்தித்திட்டம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இதனை **இரு** காரணிகளின் ஊடாக விளக்குக.

iv) சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கையின் கல்விப் புலத்தில் ஏற்பட்ட முக்கியமான **மூன்று** மாற்றங்களை விளக்குக.

## பகுதி III

08. i) பிரான்சிய புரட்சியில் ஆரம்ப காலத்தில் பிரான்சிய சமூகத்தில் காணப்பட்ட அரச குடும்பம் தவிர்ந்த **மூன்று** பிரிவினரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii) A) பிரான்சில் பொதுமக்களின் வீடுகள் மற்றும் நிலங்களில் இருந்து பெறப்பட்ட வரி எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. (2 புள்ளிகள்)

B) பிரான்சில் உப்பில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வரி எவ்வாறு அழைக்கப்பட்டது. (2 புள்ளிகள்)

iii) பிரான்சியப் புரட்சிக்கு வலுவூட்டிய தத்துவ ஞானிகள் **மூவரின்** பெயரைக் குறிப்பிட்டு அவர்களில் **இருவரைப்** பற்றி விளக்குக. (5 புள்ளிகள்)

iv) ரஷ்ய புரட்சியினால் அந்த நாட்டில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார மாற்றங்கள் **மூன்றினை** விளக்குக. (6 புள்ளிகள்)

09. i) முதலாம் உலகப் போரின் போது அச்சு நாட்டு அணியில் காணப்பட்ட **மூன்று** நாடுகளைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii) முதலாம் உலக யுத்தத்திற்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii) A) முதலாம் உலகப் போரில் ஐக்கிய அமெரிக்கா பங்கு கொள்ள வேண்டிய தேவை இருந்தமைக்கான காரணம் யாது? (2 புள்ளிகள்)

B) வேர்சேல்ஸ் உடன்படிக்கையின் மூலம் ஜேர்மனிக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iv) முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)



kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019 பக்கம் 5

வரலாறு

சுட்டெண் : ..............................

தரம் :- 11

01. அ (i)







பக்கம் 6 ஐப் பார்க்க

kalvi.lk

01. அ (ii)






kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page